**சுங்க திணைக்களத்தின் சுங்க வெகுமதி நிதியம் - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சுங்க திணைக்களத்தின் சுங்க வெகுமதி நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று , உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் , 1990 இன் 37 ஆம் இலக்க சுங்க சட்டத்தின் திருத்தப்பட்ட 1912 இன் 08 ஆம் இலக்க சுங்க அதிகாரச் சட்டத்தின் 58''ஏ'' பிரிவு மற்றும் சுங்க அதிகாரச் சட்டத்தின் 32(2)(க்யூ) பிரிவின் கீழான 818 ஆம் இலக்க சுங்க அறிவிப்பு மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக் கூற்றுக்களில் சேர்க்கப்பட்டுள்ள நடைமுறையல்லாச் சொத்துகள் அட்டவணையில் சொத்துகளுக்காக மீளாய்வாண்டின் ஆரம்ப திகதியில் ரூபா 141,718,128 கிரயத்திற்கப் பதிலாக ரூபா 63,033,460 ஆன கொண்டு செல்லும் பெறுமதி காட்டப்பட்டிருந்தது. | சொத்துக்களை பௌதீக ரீதியாக சரியாகப் பிரித்து அடையாளம் காண்பதில் சிரமம் இருப்பதாலும், இதில் பதிவு செய்யப்பட்ட பெறுமதியொன்று மட்டுமே நீண்ட காலமாக காணப்படுவதாலும் கணக்கீட்டுக் கொள்கையொன்றை சரியாக இனங்காணப்பட முடியாதிருந்தது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் வாங்கப்பட்ட ரூபா 49,687,107 ஆன நடைமுறையல்லாச் சொத்துகள் மற்றும் ரூபா 18,974,695 ஆன திறைசேரியில் வைப்புச் செய்யப்பட்டிருந்த தேய்மானம் திரண்ட நிதியத்தின் இறுதி மீதிகள் முறையே காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் | காசுப்பாய்ச்சல் கூற்றில் இது காட்டப்பட வேண்டிய அவசியமில்லை. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் இறுதி காசு மீதியின் கீழ காட்டப்பட்டிருந்தன. | | |
| (இ) | முன்னைய ஆண்டில் ரூபா 500,000 ஆன பிணை வைப்பொன்று ஒட்டுமொத்த வருமானமாக கணக்கிடப்பட்ட தவறு, மீளாய்வாண்டில் நிதிக் கூற்றுக்களில் உரிமை முலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் திருத்தப்பட்டிருந்தும் அது மீண்டும் நிதி நிலைமைக் கூற்றிலும் காட்டப்பட்டிருந்தது. | முன்னைய ஆண்டில் ரூபா 500,000 ஆன பிணை வைப்புத் தொகைகள் தவறாக ஒட்டுமொத்த பணமாக தவறாகக் கணக்கிடப்பட்டமை முன்னைய ஆண்டின் திருத்தங்கள் எனும் நிரலில் சரிசெய்யப்பட்டது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | பிரதேச சுங்க அலுவலகங்களுக்கு மீளாய்வாண்டில் திசெம்பர் மாதத்தில் பணமாகப் பெறப்பட்ட ரூபா 9,651,195 ஒட்டுமொத்த கட்டணம் மற்றும் ரூபா 960,400 ஆன சிகரெட் அபராத வருமானம் நிதிக் கூற்றுக்களில் பெற வேண்டிய வருமானமாக கணக்கிடப்பட்டுள்ளது. | இது தொடர்பான பணம் 2022.12.31 அன்று வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்தாலும், அந்த வருமானங்கள் தொடர்பான அறிக்கைகளை பிரதேச அலுவலகங்களில் இருந்து தலைமை அலுவலகத்திற்கு கொண்டு வருவதில் உள்ள சிரமங்களால் கணக்கு வைப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. | கணக்கியல் காலம் தொடர்பான பணமாக பெறப்பட்ட அனைத்து வருமானங்களும் அடையாளம் காணப்பட்டு நிதிக் கூற்றுக்களில காட்டப்பட வேண்டும். |
| (உ) | சுங்க திணைக்களத்தின் பிணை வைப்புக் கணக்கில் 04 மதுபான தொழிற்சாலைகள் மற்றும் ஒரு மதுபான ஆலை தொடர்பான தீர்க்கப்படாத 17 தொழில்துறை குற்றங்களுக்காக ரூபா 8,200,000 தொழில்துறை குற்றங்களுக்கான பிணை வைப்பு நிதியத்தில் பிணை வைப்புத்தொகையாக காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில், சுங்க அதிகாரச் சட்டம் திருத்தப்பட்டதன் பின்னர் சுங்க வெகுமதி நிதியத்திற்காக தனியான பிணை வைப்பு கணக்கொன்று பராமரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதியத்துடன் தொடர்பான பிணை வைப்பு இனங்காணப்பட் கணக்கு வைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | முன்னைய ஆண்டிற்கான பொறுப்புக்கள் ஒதுக்கப்படாது முன்னைய ஆண்டிற்கான நேரடிப் பற்றுக்களுக்கான கொடுப்பனவுகள் ரூபா 6,027,639 மற்றும் ஏனைய ஊழியர்களுக்கான ஊக்கப்படிகள் ரூபா 153,640 மீளாய்வாண்டில் ஒட்டுமொத்த வெகுமதித் தொகை கொடுப்பனவுகளில் காட்டப்பட்டிருந்தது. | அடுத்த ஆண்டுக்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும்போது சரியாக பொறுப்புக்களைக் குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும்போது பொறுப்புகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |

1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1999 இன் 8 ஆம் இலக்க புகையிலை வரிச் சட்டத்தின் 17(அ) I மற்றும் II பந்தி | பெறப்பட்ட சிகரெட் அபராதத்தில் 25 சதவீத பங்கைக் கொண்டு புகையிலை வெகுமதி நிதியத்தை நிறுவுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டிய போதிலும் , மீளாய்வாண்டின் இறுதி வரை அத்தகைய நிதியமொன்று நிறுவப்படவில்லை. இதுவரை, வருடாந்தம் ஒதுக்கப்படும் ரூபா 21,440,516 ஆன தொகை நிதியத்திற்கு செலுத்த வேண்டிய தொகையாக நீண்ட கால பொறுப்புகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட திருத்தம் தயாரித்தல் தொடங்கப்பட்டுள்ளது. | 1999 இன் 8 ஆம் இலக்க புகையிலை வரிச் சட்டத்தின் எற்பாடுகளின் பிரகாரம் புகையிலை வெகுமதி நிதியத்தை நிறுவவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு மீளாய்வு ரூபா 48,444,530 ஆன மிகை என்பதுடன் அதற்கு எதிராக முன்னைய வருடத்தின் பற்றாக்குறை ரூபா 71,662,784 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 120,107,314 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. ஒட்டுமொத்தக் கட்டணம் மற்றும் சிகரெட் அபராத வருமானம் ரூபா 38,435,933 அதாவது 31.7 சதவீதத்தால் அதிகத்தமை மற்றும் வெகுமதி பணக்கொடுப்பனவு , தேய்மானம் உட்பட்ட செலவுகள் ரூபா 76,708,784 அதாவது 49 சதவீதத்தால் குறைவடைந்தமை இந்த அதிகரிப்பிற்கு பிரதான காரணங்களாக இருந்தன.

2.2 நிதியத்தின் தொடர்நதியங்கும் தன்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு மற்றும் கடந்த 4 ஆண்டுகளுக்கான சுங்க வெகுமதி நிதியத்தின் நிதி விளைவுகள் மற்றும் தேறிய சொத்துகளின் மீதான அதன் தாக்கத்தை ஆய்வு செய்ததில், 2019 முதல் 2021 வரை நிதியத்தின் நிதி விளைவுகளில் வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டதுடன் இதன் | அவதானிப்பு சரியானதென்று கருத்துரை வழங்கப்பட்டுள்ளது. | செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து நிதியத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| காரணமாக, அந்த ஆண்டுகளின் தேறிய சொத்துக்களிலும் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது.. மீளாய்வாணடின் நிதி விளைவுகளின் அதிகரிப்பு காரணமாக, தேறிய சொத்துக்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 19.17 சதவீதத்தால் அதிகரித்திருந்தன. | | |
| (ஆ) மீளாய்வாண்டு மற்றும் கடந்த 4 ஆண்டுகளுக்கான சுங்க வெகுமதி நிதியத்தின் தேறிய காசுப்பாய்ச்சல் மற்றும் திறைசேரியில் உள்ள நிதியத்தின் வைப்பு கணக்கு நிலுவைகளின் மீதான தாக்கத்தை ஆய்வு செய்ததில், 2018 முதல் 2021 வரை நிதியத்தின் வைப்பு கணக்கு மீதியில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி படிப்படியாகக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. மீளாய்வாணடின் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அது 34.96 சதவீத அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. | அவதானிப்பு சரியானதென்று கருத்துரை வழங்கப்பட்டுள்ளது. | நிதியத்தின் நிதி நிலைமையைப் பாதுகாப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2019 திசெம்பர் 27 ஆம் திகதிய சுங்க சுற்றறிக்கை இலக்கம் 10/2019 இல் 02 ஆம் பந்தியின் பிரகாரம் , தற்போது காணப்படுகின்ற 1994 மார்ச் 4 ஆம் திகதிய சுங்க அறிவுறுத்தல் இலக்கம் 818 திருத்தத்திற்கு உட்பட்டு, 2019 மார்ச் முதல் திணைக்களத்தில் பணிபுரியும் அனைத்து அதிகாரிகளுக்கும் ஊக்கப்படிகள் செலுத்துவதில் வெகுமதி நிதியம் பங்களிப்புச் செய்திருந்தது. அதன்படி, மீளாய்வாண்டில் மதிப்பீட்டில் ரூபா 54,243,053 மற்றும் கடந்த வருடங்களில் ஊக்கத்தொகைக்கு உரிமையில்லாத | 1994 மார்ச் 4 ஆம் திகதிய சுங்க அறிவுறுத்தல் இலக்கம் 818 திணைக்களத்தின் பணிகளை விரிவுபடுத்துவதைக் கருத்தில் கொண்டு, நடைமுறைக்குப் பொருந்தும் விதத்தில் சுங்க அறிவுறுத்தல் 818 திருத்தப்பட்டு அங்கீகாரத்திற்காக 2021.03.03 அன்று நிதி அமைச்சிற்கு அனுப்பப்பட்டது. | 1994 மார்ச் 4 ஆம் திகதிய சுங்க அறிவுறுத்தல் இலக்கம் 818 இன் திருத்தங்கள் விரைவில் முடிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதிகாரிகளுக்கு 17 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்ட ரூபா 1,133,785 ஆன தொகை உட்பட ரூபா 55,376,838 சுங்க நிதியத்தில் இருந்து ஊக்குவிப்பு கொடுப்பனவுகளுக்காக செலவிடப்பட்டிருந்தது. திணைக்களத்தின் அனைத்து ஊழியர்களுக்கும் ஊக்கத்தொகை வழங்குவதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகளை வழங்கும் வகையில் உரிய சுங்க அறிவுறுத்தலில் திருத்த நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதிவரை 27 வருடங்கள் கடந்துள்ள போதிலும், நிறைவடையவில்லை. | | |
| (ஆ) | சுங்க அறிவுறுத்தல் இலக்கம் 818 இன் பிரகாரம் வெகுமதி நிதியத்தின் செயற்பாட்டு குழுவின் தற்போதைய குழு உறுப்பினர்களின் நியமனங்கள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை மற்றும் மீளாய்வாண்டில் குழுவின் வரவு செலவு திட்டம், செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம், நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளின் மீளாய்விற்காக நடாத்தப்பட்ட கூட்ட அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. . | சுங்க அறிவுறுத்தல் இலக்கம் 818 இன் பிரகாரம் வெகுமதி நிதியத்தின் செயற்பாட்டு குழு உறுப்பினர்களின் நியமனங்கள் தொடர்பான தகவல்கள் 2023 ஆம் ஆண்டில் திட்டமிட்டவாறு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும். | செயல் நடவடிக்கைத் திட்டத்தின்படி, செயற்பாட்டு நடவடிக்கைகள் மீளாய்வு செய்யப்பட்டு, குழு கூட்ட அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | 1994 மார்ச் 4 ஆம் திகதிய சுங்க அறிவுறுத்தல் இலக்கம் 818 இல் குறிப்பிடப்பட்டுள்ள சுங்க வெகுமதி நிதியத்தின் நோக்கங்களான பயிற்சியளித்தல் மற்றும் கல்விப் பணிகள், விளையாட்டு, பொழுதுபோக்கு மற்றும் நலன்புரித் திட்டங்கள், பாராட்டத்தக்க பணிகள், துணிச்சல், சிறப்புப் பணிகள் மற்றும் சிறப்புச் சோதனைகள் போன்ற நோக்கங்களுக்காக மீளாய்வாண்டில் ஒதுக்கப்பட்ட ரூபா 4,000,000 இல் எந்தப் பணிகளும் நிறைவேற்றப்படவில்லை. | 2022 ஆம் ஆண்டில் சுங்க வெகுமதி நிதியத்திற்கு மதிப்பிடப்பட்டபடி வருமானம் கிடைக்காமை. | சுங்க வெகுமதி நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்பட. வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கையகப்படுத்தல் தொடர்பான தகவல்களின்படி, 2017 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை, ஆண்டுதோறும் கையகப்படுத்தல் இலக்குகள் படிப்படியாகக் குறைந்திருந்தது. மேலும், இலக்கிடப்பட்ட பிடிப்புகளுடன் ஒப்பிடும்போது செய்யப்பட்ட பிடிப்புகளின் எண்ணிக்கை அதிகரித்திருந்தது. 2021 மற்றும் மீளாய்வாண்டில் முதலில் திட்டமிடப்பட்ட பிடிப்புகளின் இலக்கு எண்ணிக்கை முறையே 857 ஆல் மற்றும் 1,574 ஆல் குறைக்கப்பட்டு பிடிப்பு இலக்குகள் திருத்தப்பட்டிருந்தும் அந்த ஆண்டுகளில் உண்மையான பிடிப்புகளின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்திருந்ததை காட்டியது.அது 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் 1 சதவீதத்தால் மட்டுமே அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2022 ஆம் ஆணடில் மற்றும் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில், நாட்டில் ஏற்பட்டுள்ள கோவிட் தொற்றுநோய் நிலைமை மற்றும் எரிபொருள் நெருக்கடி மற்றும் பொருளாதார நெருக்கடி ஆகியவற்றின் அடிப்படையில் இலக்குகள் திருத்தப்பட்டுள்ளன. | சுங்க வரிச் சட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடையும் வகையில் கையகப்படுத்துதல் கள் செயற்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | தொழில்துறை குற்றச் சேகரிப்பு அபராதத் தொகையின் பகுப்பாய்வு ஆய்வில் 2011 ஆகஸ்ட் 11 ஆம் திகதிய 03/2011 ஆம் இலக்க சுங்க சுற்றறிக்கையின் பிரகாரம் 09 வகைப்பாடுகளின் கீழ் பிரதான வகையின் 25 மீறல்களும், பொதுப் பிரிவின் 35 மீறல்களும் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டிற்கான கணக்காய்விற்கு கிடைத்த தகவல்களின்படி, 3,627 தொழில்துறை குற்றப்பிடிப்புக்கள் வெகுமதிப் பணக் கொடுப்பனவின் அடிப்படையில் நடந்துள்ளன. அவற்றில் 2,572 அதாவது 71 சதவீத அபராதங்கள் பொதுவான குற்றங்களுக்காகவும், முக்கிய வகை நிபந்தனைகளை மீறியதற்காக 1,055 அதாவது 29 சதவீத அபராதங்கள் மட்டுமே காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | தரமான பிடிப்புக்களின் முன்னேற்றம் குறைந்துள்ளதை அவதானிக்க முடிந்தது. | தொழில்துறை குற்றச் பிடிப்புக்களின் தரமான முன்னேற்றத்தை அடைவதில் கவனம் செலுத்த வேண்டும். |

## 4. பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் வரவு-செலவுத் திட்ட புள்ளிவிவரங்கள் மற்றும் உண்மையான புள்ளிவிவரங்களுடன் ஒப்பிடுகையில், 02 வருமான விடயங்களில் 6 சதவீதம் முதல் 14 சதவீதம் வரை மற்றும் 08 செலவு விடயங்களில் 10 சதவீதம் முதல் 452 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டதால் வரவு செலவு திட்டம் பயனுள்ள முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்படவில்லை. | 2022 ஆம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட நிலைமையே இதற்குக் காரணமாகும். | வரவு செலவு திட்டம் பயனுள்ள முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவியொன்றாக பயன்படுத்தப்பட வேண்டும். |